**ஜூன் – 27**

# TNPSC துளிகள்

- ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூல் மாவட்டத்தில் உள்ள ஜொன்னகிரி தங்கச் சுரங்கம் வணிக ரீதியான செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் இது ஜியோமைசூர் சர்வீசஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் இயக்கப் படுவதோடு சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் ஒரே தனியார் துறை முதன்மைத் தங்கச் சுரங்கமாக இது விளங்குகிறது.
    - இது ராயலசீமா பகுதியில் அமைந்துள்ளது மற்றும் 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் சோதனை உற்பத்தியைத் தொடங்கியது.
- செயின்ட் ஹெலினா தீவில் வசிக்கும் செஷல்ஸ் ராட்சத ஆமையான ஜொனாதன், உலகின் மிக வயதான நிலவாழ் விலங்கு ஆகும், மேலும் இது கின்னஸ் உலக சாதனை சின்னமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்திய சட்ட நிபுணரான பேராசிரியர் பிமல் N. படேல், 2026-2035 ஆம் ஆண்டிற்கான கடல் சட்டத்திற்கான சர்வதேச தீர்ப்பாயத்தின் (ITLOS) நீதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- விளையாட்டு மேம்பாட்டிற்கான தனது பங்களிப்புகளுக்காக, பீகார் கிரிக்கெட் சங்கத்தின் (BCA) தலைவரான ஹர்ஷ் வர்தன், லண்டனில் உள்ள இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் பிரபுக்கள் சபையில் 'குளோபல் பிரெஸ்டீஜ்' விருதினைப் பெற்று கௌரவிக்கப்பட்டார்.
- கர்நாடகாவின் மங்களூருவில் புதிய உத்திசார் பெட்ரோலிய இருப்பு (SPR) ஒன்றை அமைக்கும் பணி எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திற்கு (ONGC) ஒதுக்கப் பட்டுள்ளது.
- தூதுறவு மற்றும் சர்வதேச முடிவெடுப்பதில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 24 அன்று 'சர்வதேச தூதுறவுப் பெண்கள் தினம்' அனுசரிக்கப்படுகிறது.
- உலகளாவிய வர்த்தகம் மற்றும் உலகப் பொருளாதாரத்திற்கு கடலோடிகளின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 25 அன்று 'கடலோடிகள் தினம்' அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Carrying world trade. Carrying the risks என்பதாகும்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு மின்சாரத் துறை வெள்ளை அறிக்கை

- தமிழ்நாடு அரசு மாநில மின்சாரத் துறை தொடர்பான வெள்ளை அறிக்கையை வெளியிட்டது, அதில் அதன் நிதி நிலை மற்றும் உள்கட்டமைப்பு நிலை ஆகியவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் (TNPDCL), தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகம் (TNPGCL), தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் (TNGECL) மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் (TANTRANSCO) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கடன் ₹2.47 லட்சம் கோடியாக உள்ளது என்று அந்த வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டு உள்ளது.
- மின் உற்பத்தித் திறனில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை, பழையதாகிவிட்ட மின்

பகிர்மான மற்றும் கடத்துதல் உள்கட்டமைப்பு மற்றும் மின்சாரத் துறையில் உள்ள 45% மனிதவளப் பற்றாக்குறை ஆகியவற்றை இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

- மின்சார சேவைகளை மேம்படுத்தும் வகையில் மின் உள்கட்டமைப்பை நவீனப் படுத்துதல், துணை மின் நிலையங்களைப் புதுப்பித்தல் மற்றும் 15,000 ஊழியர்களை பணியமர்த்துதல் ஆகியவற்றை இந்த அறிக்கை முன்மொழிந்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டில் மின்கட்டண திருத்தம் ஏதும் இருக்காது என்றும் மாநில அரசு அறிவித்துள்ளது.




## சென்னை நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்பு




- சென்னை பெருநகரப் பகுதியில் நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்பு (ITS) திட்டத்திற்காக ₹500 கோடிக்கும் மேலான நிதியை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.
- இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹645.59 கோடியாகும், மேலும் இது ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடம் (JICA) இருந்து மத்திய அரசு பெறும் கடனுதவி மூலம் நிதியளிக்கப் படுகிறது.

- இத்திட்டத்தில் 165 சந்திப்புகளில் தகவமைக்கக்கூடிய போக்குவரத்து சமிக்ஞைக் கட்டுப்பாடு, 58 இடங்களில் போக்குவரத்து சம்பவங்களைக் கண்டறியும் அமைப்புகள், 17 இடங்களில் மாறக் கூடிய செய்திப் பலகைகள் மற்றும் 50 சந்திப்புகளில் சிவப்பு விளக்கு விதிமீறலைக் கண்டறியும் அமைப்புகள் ஆகியவை அடங்கும்.
- இது சென்னை திறன்மிகு நகர நிறுவனத்தின் மூலம் பல நிறுவனங்களின் ஆதரவுடன் செயல்படுத்தப் பட்டு வருகிறது, மேலும் 17 இடங்களில் இதற்கான சோதனைத் திட்டம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கியது.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் 6 நிலவரப்படி, அடையாளம் காணப்பட்ட 165 சந்திப்புகளில் 104 சந்திப்புகளை மேம்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன, மேலும் இந்த அமைப்பு 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் முழுமையாகச் செயல்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் பெண்களுக்கான இலவசப் பேருந்துப் பயணம்




- இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்கள் மற்றும் ஒரு ஒன்றியப் பிரதேசத்தில் பெண்களுக்கான இலவசப் பேருந்துப் பயணத் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்த சமீபத்திய ஆய்வறிக்கை ஒன்று முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.
- தற்போது எட்டு மாநிலங்கள் மற்றும் ஒரு ஒன்றியப் பிரதேசம் அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணத்தை வழங்குகின்றன என்பதோடு இதற்கான தகுதி விதிகள் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ப மாறுபடுகின்றன.
- தமிழ்நாடு, மேற்கு வங்காளம், டெல்லி, பஞ்சாப், கர்நாடகா, கேரளா, தெலுங்கானா,

ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகியவை இத்திட்டத்திற்குத் தகுதியான மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகும்.


❖ பெரும்பாலான மாநிலங்கள் பயணிகளின் அடையாளத்தை சரிபார்த்த பிறகு, பயணப் பதிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் கட்டணமில்லா பயணச்சீட்டை வழங்கச் செய்கின்றன.

❖ சில மாநிலங்கள் தகுதியான பயணிகளை சரிபார்க்கவும், கட்டணமில்லா பயணச் சீட்டுகளை வழங்கவும் திறன் அட்டைகள் அல்லது QR குறியீடு அடிப்படையிலான அட்டைகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

❖ இந்தத் திட்டங்கள் பொதுவாக அரசு நடத்தும் பேருந்துகளுக்கு மட்டுமே பொருந்தும், அதே சமயம் பல மாநிலங்களில் உயர்தர, சொகுசு மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பேருந்து சேவைகளுக்கு இத்திட்டம் விலக்களிக்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு, டெல்லி, கேரளா, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் திருநங்கைகளுக்கும் இச்சலுகையை விரிவுபடுத்தியுள்ளன, அதே வேளையில் தமிழ்நாடு இத்திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளையும் கூடுதலாக இணைத்துள்ளது.

## ஊரக வேலைவாய்ப்பு கட்டமைப்பு




❖ புதிய ஊரக வேலைவாய்ப்பு கட்டமைப்பின் கீழ் அனுமதிக்கப்பட்ட 318 பணிகளின் இடைக் காலப் பட்டியலை இந்திய அரசு அறிவித்துள்ளது.

❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்திற்கு (MGNREGA, 2005) மாற்றாக, 'விக்சித் பாரத் – ரோஸ்கார் மற்றும் அஜீவிகா திட்டம் (கிராமப்புறம்) உத்தரவாதச் சட்டம், 2025'-இன் கீழ் இக்கட்டமைப்பு 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் செயல்படுத்தப் படும்.


❖ புதிய முறையானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 100 நாட்களுடன் ஒப்பிடுகையில், ஒரு ஊரகக் குடும்பத்திற்கு ஆண்டிற்கு 125 நாட்கள் ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பை உத்தரவாதம் செய்கிறது.

❖ இந்த 318 பணிகளானது நீர் பாதுகாப்பு, ஊரக உள்கட்டமைப்பு, ஊரக வாழ்வாதாரம் மற்றும் பேரிடர் தணிப்பு பணிகள் ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் தொகுக்கப் பட்டு உள்ளன.

- இது உள்ளூர் மட்டத்தில் முதன்மைத் திட்டமிடல் கருவியாக 'விக்சித் கிராமப் பஞ்சாயத்து திட்டத்தை' பயன்படுத்தி, "ஒற்றைத் திட்டம் – பன்முக நிதி" மாதிரியை அறிமுகப் படுத்துகிறது.

## கடவுச்சீட்டு குடியுரிமைக்கான சான்றல்ல: வெளியுறவு அமைச்சகத்தின் விளக்கம்

- கடவுச்சீட்டு என்பது இந்தியக் குடியுரிமைக்கான சான்றல்ல என்று வெளியுறவு அமைச்சகம் (MEA) தெளிவுபடுத்தியுள்ளதுடன், தனது நீண்டகால சட்டப்பூர்வ நிலைப் பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.
- கடவுச்சீட்டு சட்டம், 1967ன் படி, கடவுச்சீட்டு என்பது ஒரு பயண ஆவணமாகவே வழங்கப் படுகிறதே தவிர, குடியுரிமைக்கான ஒரு உறுதியான சான்றாக அல்ல என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
- இந்தச் சட்டம் பயண ஆவணங்களையும் இந்தியாவிலிருந்து வெளியேறுவதையும் ஒழுங்குபடுத்துவதால், குடியுரிமை நிலை திட்டவட்டமாக இல்லாத சில சந்தர்ப்பங்களில்கூட கடவுச்சீட்டுகளை வழங்க அனுமதிக்கிறது.
- பம்பாய் உயர் நீதிமன்றம் (2013 தீர்ப்புகள்) உள்ளிட்ட நீதிமன்றங்கள், கடவுச்சீட்டை வைத்திருப்பதை குடியுரிமையின் இறுதிச் சான்றாகக் கருத முடியாது என்று தீர்ப்பு அளித்துள்ளன.
- குடியுரிமையானது குடியுரிமைச் சட்டம், 1955-இன் கீழ் தனியாக நிர்வகிக்கப்படுகிறது; அதே நேரத்தில் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை (EPIC) மற்றும் குடும்ப அட்டை போன்ற அடையாள ஆவணங்களும் குடியுரிமைக்கான உறுதியான சான்றாகப் பயன்படாது.




## இந்திய மருந்தியல் புத்தகம் 2026 – இரத்தத் தர நிலைகள்

- இந்திய மருந்தியல் புத்தகம் (IP) 2026 ஆனது, இரத்தம் மற்றும் இரத்தக் கூறுகளுக்கான உலகின் முதலாவது பிரத்யேக தரநிலைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய மருந்தியல் புத்தகத்தின் 10வது பதிப்பு 2026 ஆம் ஆண்டு ஜனவரி 2 அன்று புதுடெல்லியில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி. நட்டா அவர்களால்

வெளியிடப்பட்டது.


- இரத்தத்தின் தரம் மற்றும் பாதுகாப்பை ஒழுங்குபடுத்துவதற்காக இது 20 புதிய தனி வரைவுகளையும் மற்றும் 2 திருத்தப்பட்ட தனிவரைவுகளையும் உள்ளடக்கியுள்ளது.
- இந்தத் தரநிலைகள் இரத்தமாற்றுச் சேவைகளில் பயன்படுத்தப்படும் மருந்துகள் மற்றும் இரத்தப் பொருட்களின் அடையாளம், தூய்மை, வீரியம் மற்றும் தரம் ஆகியவற்றை வரையறுக்கின்றன.
- சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய மருந்தியல் ஆணைக் குழு இந்தத் தரநிலைகளை உருவாக்கி மேம்படுத்துகிறது.
- சுகாதார அமைப்புகளில் இரத்தப் பாதுகாப்பை மேம்படுத்துவதும், இரத்தமாற்றத்தின் மூலம் பரவும் தொற்றுகளைக் குறைப்பதும் இதன் நோக்கமாகும்.




## இந்தியாவின் தூய்மையான எரிசக்தி சேமிப்பு இலக்கு 2035-36


- எரிசக்தி சேமிப்பு மற்றும் மின்விநியோகத் தொகுப்பு நிலைத் தன்மையை வலுப் படுத்துவதற்காக, 2035-36 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் (GW) புனல் மின் சேமிப்புத் திறனை எட்ட இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இதற்கான வழிகாட்டி வரைபடத்தை மின்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய மின்சார வாரியம் (CEA) தயாரித்துள்ளது.
- புனல் மின் சேமிப்பு முறையானது, அதிக தேவை உள்ள காலங்களில் மின்சாரத்தைச் சேமிக்கவும் உற்பத்தி செய்யவும் வெவ்வேறு உயரங்களில் உள்ள இரண்டு நீர்த் தேக்கங்களைப் பயன்படுத்துகிறது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, இந்தியா சுமார் 7.2 ஜிகாவாட் செயல் பாட்டுத் திறனையும், 11.6 ஜிகாவாட் கட்டுமானத்தில் உள்ள திறனையும் கொண்டு உள்ளது.

- இந்தியாவின் மொத்த நீர்மின் திறன் சுமார் 56.3 ஜிகாவாட்டாக உள்ளதுடன் மேலும் இதனை விரிவாக்குவதற்கான கணிசமான பயன்படுத்தப் படாத சாத்தியக் கூறுகள் உள்ளன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய மீத்தேன் குறைப்பு முன்னெடுப்பு





- லண்டன் பருவநிலை நடவடிக்கை வாரத்தின் போது, 2026 ஆம் ஆண்டு ஜூன் 23 அன்று ஐக்கிய நாடுகள் சபை மீத்தேன் குறைப்பிற்கான உலகளாவிய அழைப்பு மற்றும் 'செயற்கை நுண்ணறிவு சுற்றுச்சூழல் வெளிப்படைத்தன்மை முன்னெடுப்பு' ஆகியவற்றைத் தொடங்கியது.
- கார்பன் டை ஆக்சைடை விட குறுகிய காலத்தில் சுமார் 80 மடங்கு அதிக வீரியம் கொண்ட பசுமை இல்ல வாயுவான மீத்தேன் உமிழ்வைக் குறைப்பதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எண்ணெய் மற்றும் எரிவாயு துறை கசிவுகள், வெளியேற்றுதல் மற்றும் எரித்தல் ஆகியவற்றின் மூலம் மீத்தேன் உமிழ்வின் முக்கிய ஆதாரமாக அடையாளம் காணப் பட்டுள்ளது.
- உமிழ்வை 70% வரை குறைக்க, பூஜ்ஜியத்திற்கு நெருக்கமான மீத்தேன் உமிழ்வு மற்றும் தற்போதைய தொழில்நுட்பங்களை பரவலாகப் பயன்படுத்த ஐநா அழைப்பு விடுத்துள்ளது.
- இந்த செயற்கை நுண்ணறிவு முன்னெடுப்பானது, முக்கிய செயற்கை நுண்ணறிவு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தரவு மையங்களின் கார்பன், நீர் மற்றும் நிலப் பயன்பாட்டுத் தடயங்களை கட்டாயமாக வெளிப்படுத்துவதைக் கோருகிறது.
- சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்காக, 2030 ஆம் ஆண்டிற்குள் தரவு மையங்களை முழுமையாகப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் இயக்குமாறு

செயற்கை நுண்ணறிவு நிறுவனங்களை ஐநா வலியுறுத்தியுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## தெலுங்கானா AI அடிப்படையிலான அவசர கால உதவி அமைப்பு

- ❖ தெலுங்கானா மாநிலம் தனது அவசர கால உதவி மற்றும் இணையவழிக் குற்ற மேலாண்மை உள்கட்டமைப்பில் செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்புகளைப் பயன்படுத்தியுள்ளது.
- ❖ தேவையற்ற மின்னஞ்சல் மற்றும் தேவையற்ற அழைப்புகளைத் தடை செய்ய 112 அவசர கால உதவி அமைப்பு மற்றும் 'டயல் 100' காவல் உதவி எண்களில் தெலுங்கானா AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- ❖ 1930 இணைய வழிக் குற்ற உதவி எண் ஆங்கிலம், தெலுங்கு மற்றும் இந்தி மொழிகளை ஆதரிக்கும் AI குரல் வழி உதவியாளரைப் பயன்படுத்துகிறது.
- ❖ இந்த AI அமைப்பு அழைப்புகளை ஒழுங்கமைக்கப்பட்ட அறிக்கைகளாக மாற்றுகிறது மற்றும் மோசடி தொடர்பான நிதியை விரைவாக முடக்க உதவுகிறது.
- ❖ தெலுங்கானா இணையவழிப் பாதுகாப்பு பணியகம், இணையவழிக் குற்றங்கள் மற்றும் குழந்தை பாலியல் வன்கொடுமை விசாரணைகளுக்காக C-SIGHT AI தளத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ தெலுங்கானா தரவுப் பரிமாற்றம் (TGDeX) என்பது AI பயன்பாடுகளுக்கான இந்தியாவின் முதலாவது மாநில அளவிலான 'டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பாக' திட்டமிடப் பட்டுள்ளது.




# முக்கிய தினங்கள்

## கடவுச்சீட்டு சேவை தினம் 2026 – ஜூன் 24

- ❖ இந்தியாவில் கடவுச்சீட்டு வழங்குவதற்கான சட்டபூர்வ அடிப்படையை உருவாக்கிய கடவுச்சீட்டுகள் சட்டம், 1967 இயற்றப்பட்டதை நினைவுகூரும் வகையில் இந்நாள் அனுசரிக்கப் படுகிறது.
- ❖ கடவுச்சீட்டு சேவை திட்டம் பதிப்பு 2.0 மூலம் மின்னணு-கடவுச்சீட்டுகள், அலைபேசி கடவுச்சீட்டு சேவை வாகனங்கள், கடவுச்சீட்டு சேவை மையங்கள் (PSKs) மற்றும் தபால் அலுவலக கடவுச்சீட்டு சேவை மையங்கள் (POPSKs) ஆகியவற்றின் மூலம் கடவுச்சீட்டு

சேவைகளை மேம்படுத்தியுள்ளது.

- கடவுச்சீட்டு சேவை வலையமைப்பானது 2014 ஆம் ஆண்டில் 77 கடவுச்சீட்டு சேவை மையங்களில் இருந்து தற்போது நாடு முழுவதும் 545 கடவுச்சீட்டு சேவை மையங்கள் மற்றும் தபால் அலுவலக கடவுச்சீட்டு சேவை மையங்களாக விரிவடைந்துள்ளது.
- இந்தியா முழுவதும் கடவுச்சீட்டு சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்களின் பங்களிப்பை இந்நாள் அங்கீகரிக்கிறது.
- திறமையான, பாதுகாப்பான, வெளிப்படையான மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட கடவுச்சீட்டு சேவைகளை வழங்குவதில் வெளியுறவு அமைச்சகத்தின் (MEA) அர்ப்பணிப்பை இது எடுத்துக்காட்டுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★